www.Padasalai.Net www.CBSEtips.in

**V10SS**

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 10

சமூக அறிவியல்

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் 100

பகுதி - I 14×1=14

குறிப்பு: 1. அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்கு குழிப் போர்முறை
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

2) லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்க குடியரசுத் தலைவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

3) விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்?
அ) M.G. ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) ஜோதிபா பூலே ஈ) அய்யன் காளி

4) அமிர்தசரஸில் ரௌலட்சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?
அ) மோதிலால் நேரு ஆ) சைஃபுதீன் கிச்லு
இ) முகம்மது அலி ஈ) ராஜ்குமார் சுக்லா

5) சரியான கூற்றைத் தேர்வு செய்க:
i) ஒத்துழையாமை இயக்கத்தில் பெரியார் பங்கேற்கவில்லை.
ii) முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த யாகூப் ஹசனுடன் ராஜாஜி நெருக்கமாகப் பணியாற்றினார்.
iii) ஒத்துழையாமை இயக்கத்தில் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவில்லை.
iv) தமிழ்நாட்டில் கள்ளுக்கடைகளுக்கு முன்பாக மறியல் செய்யப்படவில்லை
அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி ஆ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (ii) மட்டும் சரி ஈ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி

6) பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ...............
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

7) உலகிலேயே மிக நீளமான அணை ...............
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

8) புகழ்பெற்ற சிந்திரி உரத்தொழிலகம் அமைந்துள்ள மாநிலம் ...............
அ) ஜார்கண்ட் ஆ) பீகார் இ) ராஜஸ்தான் ஈ) அசாம்

9) கீழ்க்கண்டவற்றில் அரபிக்கடலில் கலக்கும் ஆறு எது?
அ) பெரியார் ஆ) காவிரி இ) சிற்றார் ஈ) பவானி

10) தென்இந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ...............
அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா

11) நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ............... ஆவார்.
அ) குடியரசுத் தலைவர் ஆ) தலைமை நீதிபதி
இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

12) எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையை பகிர்ந்து கொள்கின்றன?
அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

13) 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர் மான்" வழங்கியவர் யார்?
அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான் இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்

14) "ஆசியாவின் டெட்ராய்ட்" என அழைக்கப்படுவது ...............
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

பகுதி - II 10×2=20

குறிப்பு: எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

15) இந்தோ-சீனாவில் நடைபெற்ற "வெள்ளை பயங்கரவாதம்" குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

16) முத்து துறைமுக நிகழ்வை விவரி.

17) இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

18) வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

V10SS

19) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20) இந்திய காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.
21) நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் ஒப்பிடுக.
22) தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
23) தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.
24) இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகள் யாவை?
25) அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?
26) உலகமயமாக்கல் என்றால் என்ன?
27) உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் யாவை?
28) தொழில் முனைவோர் என்பவர் யாவர்?

## பகுதி - III  10×5=50

**குறிப்பு: எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
i) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ............. ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
ii) இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை .............
iii) கிழக்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் ............. ஆகும்.
iv) எளிதில் செல்ல முடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து .............
v) ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் ............. நகரில் அமைந்துள்ளது.
30) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31) கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி கட்டுரை வரைக.
32) இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணிகளை விவாதிக்கவும்.
33) **வேறுபடுத்துக:**
i) மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி
ii) உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்
**காரணம் கூறுக:** (iii) வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்
34) தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
35) தமிழ்நாட்டின் பீடபூமி நிலத்தோற்றத்தின் தன்மையை விவரி.
36) அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
37) இந்தியப் பிரதமரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38) பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
39) இந்தியாவில் GDP யில் உள்ள பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.
40) சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41) **கீழ்க்காண்பவற்றிற்கு காலக்கோடு வரைக:**
1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து இந்திய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
(i) ஜாலியன் வாலாபாக் (ii) பாரக்பூர் (iii) டில்லி (iv) ஜான்சி (v) வேதாரண்யம்

## பகுதி - IV  2×8=16

**குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

43) காந்தியடிகளின் சட்டமறுப்பு இயக்கத்தை பற்றி விவரிக்கவும். **(அல்லது)**
முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதிக்கவும்.
44) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) கோதாவரி
ii) ஆரவல்லி மலைத்தொடர்
iii) பாக்நீர்ச்சந்தி
iv) சுந்தரவனக் காடுகள்
v) பருத்தி விளையுமிடம்
vi) ஒரு பெட்ரோலிய மையம்
vii) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை
viii) சென்னை முதல் கொல்கத்தா வரையிலான ரயில்பாதை **(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) மன்னார் வளைகுடா
ii) மேட்டூர் அணை
iii) தூத்துக்குடி
iv) அகத்தியமலை
v) நாகப்பட்டினம்
vi) பறவைகள் சரணாலயம் ஒன்று
vii) இரும்பு கிடைக்குமிடம் ஒன்று
viii) தாமிரபரணி